**வடக்கின் துரித மீட்டெடுப்பு செயற்திட்டம் (ஏயூஎஸ்.ஏஜடி) (ஈஎன்ஆர்ஈபி) - 2012 யூலை 31 இல் முடிவடைந்த ஏழு மாதங்கள்**

---

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2012 யூலை 31 இல் முடிவடைந்த ஏழு மாதங்களிற்காக முறையான கணக்கேடுகளைப் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2012 யூலை 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) மீளாய்வாண்டின் ஏழு மாதங்களிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஎஸ்) அவை நிதியளிப்பு உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கமைய மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடியுமென்றும்

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) மனிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 யூலை 31 இல் முடிவடைந்த ஏழு மாதங்களிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 7,399,560 ஆகவும் 2012 யூலை 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,172,825,228 ஆகவும் இருந்தது. மீளாய்விற்குட்பட்ட செயற்திட்டச் செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2012 யூலை 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது

| **செலவின விடயங்கள்** | **2012 யூலை 31 இல் முடிவடைந்த ஏழு மாத காலத்திற்கான செலவினம்** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| **பகுதி : பீ** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (ஆ) வேலைக் கூலி (வேலைக்காக காசு) | 7,399,560 | 319,695,607 | 1,172,825,228 |
| மொத்தம் | 73,399,560 | 319,695,607 | 1,172,825,228 |

## 2.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி மீளாய்விற்குட்பட்ட ஏழு மாதங்களிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மற்றும் 2012 யூலை 31 இல் உள்ளவாறான மீதி என்பன கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2012 சனவரியில் உள்ளவாறான மீதி | 170,908 | 19,466,687 |
| கூட்டு :- மீள்நிரப்பகள் | 111,577 | 15,343 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | (15,565) |
| | 282,485 | 19,466,465 |
| கழி :- பற்றுதல்கள் | 282,485 | 19,466,465 |
| 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | **இல்லை** | **இல்லை** |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்விற்குட்டபட்ட ஏழு மாதங்களிற்கான காலரீதியான செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 நிதிகளின் பயன்பாடு

(அ) வகுதி 1 இன் கீழ் பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவைக்காக மானிய உடன்படிக்கையில் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட காலத்தின் போது செயற்திட்டத்தால் எவ்வித செலவினமும் இடம்பெயர்ந்திருக்காத. அதேநேரம் வகுதி 2 இன் கீழான செலவினம் கீழே தரப்பட்ட விபரங்களின்படி ஒதுக்கீட்டினை விஞ்சியிருந்தது.

| வகுதி | ஒதுக்கப்பட்ட மானியத் தொகை | | செலவினம் | மிகைச் செலவினம் | |
|---|---|---|---|---|---|
| | யூஎஸ்டி | இல.ரூபா | | இல.ரூபா | % |
| வேலைக்காக காசு நிகழ்ச்சித்திட்டத்திற்காக செயற்திட்டத்தின் பொருட்கள் மற்றும் ஆலோசனை சேவை | 2,634,767 | 296,249,943 | இல்லை | இல்லை | இல்லை |
| வேலைக்காக காசு நிகழ்ச்சித் திட்டத்திற்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகள் | 7,904,303 | 888,750,057 | 1,172,825,228 | 284,075,171 | 32 |
| | 10,539,070 | 1,185,000,000 | 1,172,825,228 | 284,075,171 | |

## 3.3 செயற்திட்ட கண்காணிப்பு, அறிக்கையிடல் மற்றும் மதிப்பாய்வு

மானிய உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையின் 2.05 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு வேலைக்கான காசின் போதிய மற்றும் முறையான செயற்திட்ட கண்காணிப்பு, அறிக்கையிடல் மற்றும் மதிப்பாய்வு முறைமைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு